21.07.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் பல்கலைக் கழக 2-ஆம் கட்ட கலந்தாய்வில் 54 இடங்கள் தேர்வு**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பொதுப் பிரிவுக்கான 2-ஆம் கட்ட கலந்தாய்வில் திங்கள்கிழமை 54 இடங்கள் மாணவர்கள் தேர்வு செய்தனர். வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் உறுப்பு, இணைப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு ஜூன் 27-ஆம் தேதி தொடங்கியது. கடந்த 29-ஆம் தேதி முதல் ஜூலை 7-ஆம் தேதி வரை நடைபெற்ற முதல் கட்டப் பொதுக் கலந்தாய்வில் 1,323 இடங்கள் நிரம்பியுள்ளன.

மீதமுள்ள 138 இடங்களுக்கு ஜூலை 18-ஆம் தேதி 2-ஆம் கட்டக் கலந்தாய்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ரமலான் பண்டிகை விடுமுறையால் கலந்தாய்வு திங்கள்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், திங்கள்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக்கு மொத்தம் 255 மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இதில் 94 பேர் கலந்துகொண்டு, 54 இடங்களைத் தேர்வு செய்தனர். 40 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

வேளாண் பல்கலைக் கழகத்தில் இதுவரை நடத்தப்பட்ட 2 கட்ட கலந்தாய்வில் 1,374 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மொத்தம் 371 மாணவர்கள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

**பல தலைமுறைகளாகத் தொடரும் இயற்கை வேளாண்மை**



ஆடுகளின் கழிவுகளை விளை நிலங்களில் அடியுரமாகப் பயன்படுத்தும் பழமையான மந்தை அடைத்தல் முறையை கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பல தலைமுறைகளாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

மக்கள்தொகை பெருக்கத்துக்கு ஏற்ப உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்தால், விவசாயத்தில் பசுமைப் புரட்சி என்ற பெயரில் இயற்கை வேளாண்மைக்குப் பதிலாக செயற்கை உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இந் நிலையில், இயற்கை வேளாண்மையின் அவசியம் குறித்து, விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் வேளாண் விஞ்ஞானிகள் தற்போது தீவிரம் காட்டி வருகின்றனர்.

காவிரி டெல்டா மாவட்டமான தஞ்சைக்கு ஈடாக நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளில் சிலர், பல தலைமுறையாக இயற்கை வேளாண்மையை விடாமல் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர். மரம், செடி ஆகியவற்றின் இலைகள், மாட்டுச் சாணம் போன்றவற்றை அடியுரமாக இவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும், சிலர் ஆடுகளைப் பட்டியில் அடைக்கும் முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர். கிதாரிகள்: நெல், ராகி போன்ற

பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகள், நாற்றுகளை நடவு செய்வதற்கு முன் விளை நிலத்தில் அடியுரத்துக்காக ஆடு, வாத்து ஆகியவற்றை வேலி அமைத்து அடைப்பர். பட்டியில் அடைக்கப்படும் ஆடுகள் வெளியேற்றும் கழிவுகள், ரோமம் போன்றவை விளை நிலத்துக்கு அடியுரமாகப் பயன்படும். இவ்வாறு விளை நிலங்களில் ஆடு, வாத்து ஆகியவற்றை வேலி அமைத்து பட்டியில் அடைக்கும் தொழிலைச் செய்பவர்கள் கிதாரிகள் என அழைக்கப்படுவர். குரும்பர் இனத்தைச் சேர்ந்த இவர்கள் பல ஆண்டுகளாக, மந்தை போடுதல் அல்லது பட்டி போடும் தொழிலைச் செய்து வருகின்றனர். தற்போது இந்த முறை அழிந்து வந்தாலும், தனது 7 வயது முதல் இத் தொழிலை செய்து வரும் கிதாரியான கனகமுட்லுவைச் சேர்ந்த முனியப்பன் (45) கூறியது: பயிர் நாற்று நடவு செய்ய, விளை நிலத்தைத் தயார் செய்வதற்கு முன், பயிருக்கு அடியுரம் கிடைக்கும் வகையில் விளை நிலத்தில் பட்டி போடுவோம். ஒரு பட்டியில் குறைந்தது 50 முதல் 300 ஆடுகள் வரை அடைப்போம். இவ்வாறு பட்டியில் அடைக்கப்படும் ஆடு ஓன்றுக்கு ஒரு ரூபாய் கட்டணமாக வசூலிப்போம். தற்போது இதற்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், ஆடு வளர்ப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதனால், 4 அல்லது 5 நபர்களாகச் சேர்ந்து இத் தொழிலைச் செய்து வருகிறோம் என்றார். கிருஷ்ணகிரி அருகே நாட்டான்கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி புவனேஸ்வரி (45) கூறியது: தற்போது காடு அழிக்கப்பட்ட நிலையில், கால்நடைகளுக்கான மேய்ச்சல் பரப்பளவு குறைந்துவிட்டது. இதனால், கிதாரிகளும் மாற்றுத் தொழிலுக்குச் சென்றுவிட்டனர். இதனால், தொன்றுதொட்டு பல தலைமுறையாகக் கடைப்பிடித்து வந்த இயற்கை விவசாயத்தைத் தொடர முடியாத நிலை ஏற்படுமோ என்ற அச்சத்தில், நாங்களே 50 ஆடுகளை வளர்த்து வருகிறோம். எங்களது விளை நிலத்தில் மட்டுமல்லாமல், மற்றவர்களின் விளை நிலங்களிலும் மந்தை போடுவோம்.

இதன் மூலம், கூடுதலாக மகசூல் கிடைக்கும். இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நோய்த் தாக்குதல் குறைகிறது. மண் மலட்டுத் தன்மையும் அடைவதில்லை என்றார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண் தொழிலில் இயந்திரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், இயற்கை முறை வேளாண்மையான, இப் பழமையான தொழில் நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்தி வருவது வரவேற்கத்தக்கது.

**நீலகிரியில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

நீலகிரி மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளையில், தமிழகம், புதுவையில் ஆங்காங்கே மழை பெய்யவும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழைக்கு வெப்பச் சலனமே காரணம் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் சின்னக் கல்லாறில் 70 மி.மீ. மழையும் தேவலாவில் 60 மி.மீ. மழையும் பெய்துள்ளது. நடுவட்டம், சேலத்தில் 50 மி.மீ. மழையும், வால்பாறையில் 40 மி.மீ. மழையும் பெய்துள்ளது. அதேபோல, திருவாரூர் (30 மி.மீ.), சென்னை (20 மி.மீ.), கேத்தி, தளி, உதகை, திருவள்ளூர், செய்யாறு, பெரியகுளம், பூந்தமல்லி, பட்டுக்கோட்டை, ராமநாதபுரம், கன்னியாகுமரி (10 மி.மீ.) உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்துள்ளது. 101 டிகிரி வெயில்: தமிழகத்தின் பல்வேறு இடங்களில் திங்கள்கிழமையன்று 101 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவானது. கடலூர், மதுரை, நாகப்பட்டினம், புதுச்சேரி, திருச்சி ஆகிய இடங்களில் 101 டிகிரி வெப்பம் பதிவானது. சென்னையில் 99 டிகிரி வெயிலும் வேலூர் 97 டிகிரி வெயிலும் பதிவானது.

**ஒகேனக்கல்லில் நீர் வரத்து 2-ஆவது நாளாக அதிகரிப்பு**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர் வரத்து 2-ஆவது நாளாக இன்று அதிகரித்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் உள்ள நீர் பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர், ஹேமவதி, ஹாரங்கி உள்ளிட்ட அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இந்த அணைகளில் இருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் கடந்த இரண்டு நாள்களுக்கு முன், பிலிகுண்டு வழியாக ஒகேனக்கல் வரத் தொடங்கியது. இதனால் கடந்த சில நாள்களாக ஒகேனக்கல் அருவியில் குறைவாக காணப்பட்ட நீர் வரத்து, ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி நொடிக்கு 11,500 கன அடியாக அதிகரித்து. இந்த தண்ணீர் படிப்படியாக அதிகரித்து இன்று காலை நொடிக்கு 14,500 கன அடியாக இருந்தது. இந்த நீர் வரத்து மாலை 6 மணி நிலவரப்படி மேலும் அதிகரித்து 22,000 கன அடியானது. இதைத் தொடர்ந்து, ஒகேனக்கல்லுக்கு வரும் நீர் வரத்து இரவு மேலும் அதிகரிகக் கூடும் என தெரிகிறது. நீர் வரத்து அதிகரித்ததால் தற்போது ஒகேனக்கல் அருவியில் பிரதான நீர்வீழ்ச்சிக்கு செல்லும் நடை பாதை தொட்டப்படி வெள்ளநீர் பெருக்கெடுத்து ஒடுகிறது.

**பிலிகுண்டுலுவிற்கு நீர்வரத்து அதிகரிப்பு**



காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையாலும், கர்நாடக அணைகளில் திறந்துவிடப்படும் உபரிநீர் வரத்தாலும், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவிற்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

உபரி நீரானது தமிழக எல்லையான பிலிகுண்டுலுவிற்கு வந்து சேர்ந்த நிலையில், ஒகேனக்கல் அருவிகளில் அதிக அளவில் தண்ணீர் ஓடுகிறது. இதனிடையே அங்குள்ள அருவிகளின் குளிக்கவும் சுற்றுலா பயணிகள் குவியத் தொடங்கியுள்ளனர்.

**தமிழகக் காய்கறிகளுக்குத் தடை முயற்சி: கேரளத்துக்கு விஜயகாந்த் கண்டனம்**

தமிழகக் காய்கறிகளுக்குத் தடை விதிக்க கேரளம் எடுக்கும் முயற்சிக்கு தேமுதிக தலைவர் விஜயகாந்த் கண்டனம் தெரிவித்தார். இதுதொடர்பாக திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் உற்பத்தியாகும் காய்கறிகளில் நச்சுத்தன்மை இருக்கிறது என்ற பொய்யான குற்றச்சாட்டைக் கேரளம் தொடர்ந்து சொல்லி வருவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழகத்தில் அதே காய்கறிகளை உட்கொள்ளும் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. அதனால் யாரும் இறக்கவும் இல்லை. இது தொடர்பாக வேளாண் பல்கலைக்கழகமும், உணவு பாதுகாப்புக்

கழகமும் பல்வேறு ஆய்வுகள் செய்து, உடலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் எவ்வித நச்சுத்தன்மையும் தமிழக காய்கறிகளில் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளன. ஆனால், கேரள அரசு தமிழக விவசாயிகளைப் பழிவாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நடைமுறைக்கு முற்றிலும் சாத்தியப்படாத வகையில் தேசிய ஆய்வகங்களில் ஆய்வு செய்யப்பட்ட சான்றுடன் வரும் காய்கறி வாகனங்கள் மட்டுமே இனிமேல் கேரளாவுக்குள் அனுமதிக்கப்படும் எனக் கூறுவது, இந்தியாவின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கும் செயலாகும்.

கேரளம், தமிழகத்தின் அண்டை மாநிலமா? இல்லை அண்டை நாடா எனும் சந்தேகம் எழுகிறது. முதல்வர் ஜெயலலிதா உடனடியாக இந்தப் பிரச்னை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## "பயிர்க் காப்பீடு: குறுவை நெல் சாகுபடிக்கு பிரிமியம் செலுத்த ஜூலை 31 கடைசி'

குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய ஜூலை 31-க்குள் பிரிமியம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கு.ரா.சாரநாத்பாபு வெளியிட்டுள்ள செய்தி: மதுரை மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவ சாகுபடி பயிர்களான நெல், கம்பு, சோளம், துவரை, உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, பருத்தி, கரும்பு ஆகியவற்றுக்கு விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளலாம். இயற்கை இடர்பாடுகளால் ஏற்படக் கூடிய மகசூல் இழப்புக்கு, இழப்பீட்டுத் தொகை பெற பயிர்க் காப்பீடு செய்வது அவசியமாகும்.

குறுவை நெல் சாகுபடி செய்யும், கடன்பெறும் விவசாயிகள் நெற்பயிருக்கு காப்பீடு செய்ய ஏக்கருக்கு ரூ.254 பிரிமியம் செலுத்த வேண்டும். கடன் பெறாத மற்றும் சிறுகுறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.228 செலுத்த வேண்டும். பயிர்க் கடன் பெற்றுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் அல்லது வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலமாக ஜூலை 31 ஆம் தேதிக்குள் பிரிமியத் தொகையைச் செலுத்த வேண்டும்.

சிறுதானியப் பயிர்கள், பயறு வகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு செப்.30 ஆம் தேதிக்குள் பரிமியம் செலுத்த வேண்டும். தென்னை விவசாயிகள் தங்களது தோப்பில் உள்ள மரங்களின் வயது 15 ஆண்டுகளுக்கு குறைவாக இருந்தால் மரம் ஒன்றுக்கு ரூ.2.25-ம் , 15 வயதுக்கு கூடுதலாக இருந்தால் ரூ.3.50-ம் பிரிமியத் தொகை செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம். இயற்கைச் சீற்றங்களால் முழுமையாகப் பாதிக்கப்பட்டாலோ, முற்றிலும் பலன் கொடுக்காத நிலை ஏற்பட்டாலோ இழப்பீடு வழங்கப்படும். பதினைந்து வயதுக்குள்பட்ட மரத்திற்கு ரூ.900, 16 முதல் 60 வயது வரை உள்ள மரத்திற்கு ரூ.1750-ம் இழப்பீடாகக் கிடைக்கும். இத்திட்டத்தில் சேர குறைந்தபட்சம் 5 மரங்களாவது சாகுபடி செய்திருக்க வேண்டும். ஆண்டுக்கு 30 காய்களுக்கு மேல் காய்க்கக் கூடிய மரங்களாக இருப்பது அவசியம். காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அல்லது வட்டார வேளாண் விரிவாக்க மையத்தினைத் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

ஏழு குளம் கழிவுநீர், சாக்கடைக் கழிவுநீர் பாசன விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் உடுமலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு ஓய்வு பெற்ற நீதிபதி மாணிக்கம் தலைமை வகித்தார். ஒன்றியக் குழு உறுப்பினர் செல்வராஜ், முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் விவரம்:

உடுமலை அருகே உள்ள ஏரிப்பாளையம், குறிஞ்சேரி, சின்னவீரன்பட்டி, புக்குளம், சுண்டக்காம்பாளையம், வெள்ளியம்பாளையம், ராஜவாய்க்கால் ஓடைப் பகுதி விவசாயிகள் காலங்காலமாக ஏழு குளம் கழிவுநீர் மற்றும் சாக்கடைக் கழிவுநீரைக் கொண்டு விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், இதற்கு பங்கம் விளைவிக்கும் விதமாக ஒருசில விவசாயிகள், இதற்காக ஏரிப்பாளையம் பகுதியில் கிணறுகள் வெட்டியும், நீர்வழித் தடத்தை மாற்றும் செயலிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், மேற்கண்ட கிராமங்களில் விவசாயம் பாதிப்பதோடு, நிலத்தடி நீரும் வற்றிப்போகும் நிலை ஏற்படும். எனவே, காலங்காலமாக விவசாயம் செய்து வரும் சிறு, குறு விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் வராமல் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதில், வழக்குரைஞர் சி.முருகானந்தம், ரகுநாத், எஸ்.மகாலிங்கம், காளிமுத்து, உடுமலை சிதம்பரநாதன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**அந்தியூரில் ரூ. 1.50 கோடிக்கு பருத்தி ஏலம்**

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ. 1.50 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.

ஏலத்துக்கு, சுமார் 10 ஆயிரம் மூட்டை பி.டி. ரகப் பருத்தி விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், குறைந்த பட்சமாக குவிண்டாலுக்கு ரூ. 3, 900-க்கும், அதிகபட்சமாக ரூ. 4,300 -க்கும் விற்பனையானது. மொத்த

விற்பனை ரூ. 1.50 கோடி. கடந்த வாரமும் இதே அளவுக்கே பருத்தி வரத்தும் விலை நிலவரமும் இருந்தது. பருத்தி அறுவடை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதால் அடுத்த வாரம் முதல் பருத்தி வரத்து குறைவாக இருக்கலாம் எனவும், விலையும் சற்றே உயர வாய்ப்புகள் உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

**24-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சேலம் மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (ஜூலை 24) நடைபெற உள்ளது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் ஆட்சியர் வி.சம்பத் தலைமையில் 24-ஆம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறும் குறை தீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை 24-ல் விவசாயிகள் குறைகேட்பு முகாம்**

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கான குறைகேட்பு முகாம் வரும் ஜூலை 24-ம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு முகாம் வரும் வெள0ளிக்கிழமை (ஜூலை 24) காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில் ஆட்சியர் சு. கணேஷ் தலைமையில் நடைபெற உள்ளது.இதில் பல்துறை அரசு அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு விளக்கம் அளிக்க உள்ளனர்.எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இதில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை மட்டும் தெரிவித்து பயன்பெறலாம்.

**பெரம்பலூர் மாவட்டம்: 31 ஊராட்சிகளில் 2,439 விவசாய நிலங்களில் மண் பரிசோதனை**

பெரம்பலூர் மாவட்டத்தில் 31 ஊராட்சிகளில் 2,439 விவசாய நிலங்களில் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் (பொ) ச. மீனாட்சி. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் பயன்பெறும் வகையில், அவர்களது நிலத்துக்குச் சென்று மண்ணின் தன்மையை பரிசோதித்து தெரிவிக்கும் வகையில், ரூ. 40 லட்சத்தில் நடமாடும் மண் பரிசோதனை வாகனம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மண்ணில் உள்ள பேரூட்ட, நுண்ணூட்ட சத்துகளையும், களர் மற்றும் உவர் தன்மையையும் அறிந்து தேவையான உரங்களை இட்டு அதிக மகசூல் பெறலாம்.

இந்த வாகனத்தில் மண்ணின் களர் மற்றும் அமில தன்மையை அறிய பி.எச் மீட்டரும், மண்ணில் உள்ள உப்புத் தன்மையை அறிய இ.சி. மீட்டரும் உள்ளது. இதில், மண்ணின் கார, அமில தன்மை 6-க்கும் குறைவு என்றால் அமில நிலையும், 6-8 வரை இருந்தால் நடுநிலையான மண் எனவும், 8.1-க்கும் அதிகமாக இருந்தால் களர் மண் எனவும் பி.எச் மீட்டர் மூலம் அறிந்து கொள்ளலாம். மண்ணில் உள்ள உப்பின் நிலை 1-க்கு கீழ் இருந்தால் நல்ல நிலையான மண் எனவும், 1-க்கு அதிகமாக இருந்தால் பயிருக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ள மண் எனவும் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப குறைகளை சீரமைத்து பயிரிடலாம் என்பதை இ.சி. மீட்டர் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

மேலும், மண்ணில் உள்ள பாஸ்பரஸ் சத்தை அறிய ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் என்ற கருவியும், பொட்டாஷ் சத்தை அறிய ப்ளேம் போட்டோ மீட்டர் என்ற கருவியும், நுண்ணூட்ட சத்துகளான தாமிரம், மாங்கனீசு, இரும்பு, துத்தநாகம் ஆகிய சத்துக்களை அறிய அட்டாமிக்

அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டரும் உள்ளது. தழைச்சத்தை ஆர்கானிக் கார்பன் மூலம் ஆய்வு செய்து விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மண் பரிசோதனை வாகனம் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் 31 வருவாய் கிராமங்களில் மண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூரில் 540, ஆலத்தூரில் 486, வேப்பந்தட்டையில் 708, வேப்பூரில் 708 விவசாயிகளுக்கு என மொத்தம் 2,439 விவசாயிகளுக்கு மண்மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

**அண்ணாமலைப் பல்கலை. வேளாண் படிப்புகளுக்கான கலந்தாய்வு: 1,024 இடங்கள் நிரம்பின**

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பி.எஸ்சி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை படிப்புகளுக்கான கலந்தாய்வில் மொத்தமுள்ள 1,070 இடங்களில் 1,024 இடங்கள் நிரம்பின.

அண்ணாமலைப் பல்கலைக்கழக பி.எஸ்சி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை படிப்புகளில் சேர 11,053 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இதில் 612 விண்ணப்பங்கள் தகுதியில்லாததாதல் நிராகரிக்கப்பட்டன. தகுதி பெற்ற விண்ணப்பங்கள் 10,409. பி.எஸ்சி வேளாண்மை படிப்புக்கு 1,000 பேரும், பி.எஸ்சி தோட்டக்கலை படிப்புக்கு 70 பேரும் அனுமதி சேர்க்கை செய்யப்படுவர் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக சாஸ்திரி அரங்கில் பி.எஸ்சி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை படிப்புகளுக்கான கலந்தாய்வு கடந்த 16-ம் தேதி தொடங்கி 20-ம் தேதி வரை நடைபெற்றது. கலந்தாய்வை தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன்

தொடங்கி வைத்து, மாணவர்களுக்கு அனுமதிச் சேர்க்கை ஆணைகளை வழங்கினார். கலந்தாய்வில் பங்கேற்ற 14 மாற்றுத் திறனாளிகளில், தகுதி பெற்ற 6 பேருக்கு அனுமதி சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது. 3 நாள்கள் நடைபெற்ற இக்கலந்தாய்வில் மொத்தமுள்ள 1,070 இடங்களில் 1,024 இடங்கள் நிரம்பின. மீதமுள்ள 46 இடங்கள் 2-ம் கட்ட கலந்தாய்வில் நிரப்பப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**வேளாண் அலுவலர்கள் ஆய்வு**

விழுப்புரம் மாவட்டத்தில் மணம்பூண்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த உரம் மற்றும் அதன் தன்மை குறித்து வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) இளவரசன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ஆர்.எம்.ராமசாமி ஆகியோர் அடங்கிய குழு கடந்த 19-ம் தேதி ஆய்வு செய்தனர்.

இந்த உரங்களை உபயோகப்படுத்துவதால் பயிர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என வேளாண்மை துறை அலுவலர்களால் ஆய்வு செய்து ஆட்சியர் எம்.லட்சுமியிடம் அறிக்கை சமர்பிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்குப் பயிற்சி**

புதுச்சேரி அரசின் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், தோட்டக்கலை பயிர்களுக்கான ஆடி பருவ முன்பட்டப் பயிற்சி முகாம் திருபுவனையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

துணை வேளாண் இயக்குநர் ராகவன் முகாமைத் தொடங்கி வைத்தார். இதில் வாழை சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விளக்கப்பட்டது.

திருபுவனை, சன்னியாசிக்குப்பம், மதகடிப்பட்டு மற்றும் பி.எஸ். பாளையம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கேரளாவிற்கு பயணித்த 306 டன் காய்கறிகள்: அரசு மூலம் தீவிர கண்காணிப்பு**



தமிழகத்தில் இருந்து எந்த பிரச்னையும் இன்றி, நேற்று கேரளாவுக்கு, 306 டன் காய்கறிகள் எடுத்து செல்லப்பட்டன. இது, அரசு மூலம் கண்காணிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து நாள்தோறும், 200 லாரிகள் மூலம், கேரளாவிற்கு பல வகை காய்கறிகள் எடுத்து செல்லப்படுகின்றன. இந்த காய்கறிகளில் ரசாயன தன்மை இருப்பதாக, கேரள அரசு பிரச்னை கிளப்புகிறது. இதுகுறித்து, ஏற்கனவே ஆய்வு செய்த தமிழக அரசு, காய்கறிகளில்

நச்சுதன்மை இல்லை என, உறுதி செய்துள்ளது. இருப்பினும், தேசிய ஆய்வகங்களில், சான்றிதழ் பெற்று வரும் காய்கறிகளை மட்டுமே, கேரளாவிற்குள் அனுமதிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழகத்தில் இருந்து அனுப்பப்படும் காய்கறிகள் திருப்பி அனுப்பப்படுமா என்ற கேள்வி எழுந்தது. இதையடுத்து, தமிழக - -கேரள எல்லைகளில் உள்ள சோதனைச்சாவடிகளில், தமிழக அரசு மூலம், நேற்று தீவிரமாக கண்காணிக்கப்பட்டது. ஆனால், எந்த பிரச்னையும் இன்றி, கேரளாவிற்கு காய்கறிகள் சென்றுள்ளன.

**இதுகுறித்து, அரசு அதிகாரி ஒருவர் கூறியதாவது:**கோவை வழியாக, 80 டன்; கன்னியாகுமரி வழியாக, 76 டன்; தேனி வழியாக, 150 டன் என, மொத்தம், 306 டன் காய்கறிகள் கேரளா சென்றன. தமிழகத்தில் இருந்து காய்கறிகள் செல்லவில்லை என்றால், அங்கு விலை கணிசமாக உயரும். ஒரு கிலோ காய்கறி, 100 ரூபாய் வரை விலை அதிகரிக்கும். அதனால், பாதிக்கப்படப் போவது கேரள மக்கள் தான். இனியாவது கேரள அரசு, இதை உணர்ந்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## காய்கறிகளில் ரசாயன மருந்து தாக்கம் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வு

கூடலூர்: விளைநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் காய்கறிகளில் ரசாயன மருந்துகளின் தாக்கம் எப்படி உள்ளது என்பது குறித்த ஆய்வை, உணவு பாதுகாப்பு அதிகாரிகள் தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொண்டுஉள்ளனர்.காய்கறிகள் உற்பத்தியில் ரசாயன மருந்துகளின் பயன்பாடு அதிகமாக உள்ளது. ரசாயன மருந்துகள் தெளிக்காவிட்டால், காய்கறிகளை முழுமையாக உற்பத்தி செய்யவே முடியாது என்ற நிலை உள்ளது. ஆனால், இதனை பயன்படுத்தும் மக்கள்

பாதிப்பிற்கு உள்ளாகின்றனர் என்பதை மறுக்க முடியாது.தமிழகப்பகுதியில் இருந்து வரும் காய்கறிகளில் ரசாயன மருந்துகளின் தாக்கம் அதிகம் உள்ளது என கேரளாவில் நடத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதனால் கேரளாவிற்கு கொண்டு வரும் காய்கறிகளுக்கு, அம்மாநில அரசு கட்டுப்பாடுகளை விதிக்கத் துவங்கியுள்ளது. மருந்து கலந்து வரும் காய்கறிகளை தடை செய்யவேண்டும் எனக் கூறிய கேரளா, தற்போது உணவு பாதுகாப்பு ஆணையத்திடமிருந்து பெற்ற லைசென்சு இருந்தால் மட்டுமே கேரளாவிற்குள் காய்கறிகளை அனுமதிக்க வேண்டும் என, எல்லைப்பகுதியில் உள்ள 'செக்போஸ்ட்' அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், தேனி மாவட்டத்தில் விவசாய நிலத்தில் இருந்து கொண்டு வரப்படும் காய்கறிகளை உணவு பாதுகாப்பு அலுவலர்கள் நேற்று முதல், ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆய்வுக்காக எடுக்கப்படும் 'சாம்பிளை' மதுரையில் உள்ள ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைப்பர். இதற்கான முடிவுகள் வருவதற்கு 15 நாட்கள் வரை ஆகும். விவசாய நிலத்தில் இருந்து எடுக்கப்பட்ட காய்கறிகள், 15 நாட்கள் வரை பயன்படுத்தாமல் வைத்திருந்தால் வீணாகும் என்பதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். 'மொபைல் லேப்' வேண்டும்: காய்கறிகளில் ரசாயன மருத்துகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு உடனடியாக அதற்கான முடிவுகள் தெரியும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 'மொபைல் லேப்' அவசியம். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட காய்கறிகளின் தன்மை குறித்து உடனடியாக தெரியும் வகையில் வசதியை விரைவில் ஏற்படுத்த அரசு முன் வரவேண்டும். இல்லாவிட்டால், காய்கறிகள் கேரளாவிற்கு அனுப்ப முடியாமல் சிக்கலை ஏற்படுத்தி விடும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## கோவையில் கொட்டுது மழை!

கோவை: கோவை மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை மீண்டும் தீவிரமடைந்து உள்ளது. இதனால், அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தமிழகத்தில், மே இறுதியில், தென்மேற்கு பருவமழை துவங்கியது. கோவை, நீலகிரி மாவட்டங்களில், ஏற்கனவே தொ டர்ந்து கனமழை பெய்தது. கோவை மாவட்டத்தில், சிறுவாணி, பில்லூர், ஆழியாறு, பரம்பிக்குளம், சோலையாறு அணைகளின் நீர்மட்டம், கணிசமாக உயர்ந்தது. கோவை செல்வசிந்தாமணி, உக்கடம் பெரியகுளம், குறிச்சி, செங்குளம் ஆகிய குளங்கள் நிரம்பும் நிலையில் உள்ளன.

கடந்த 20 நாட்களாக, குறைந்திருந்த மழை, மீண்டும் பெய்ய துவங்கியுள்ளது. கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, ஆனைமலை, வால்பாறை பகுதிகளில், தொடர் மழை பெய்கிறது.

## கபினி, கே.ஆர்.எஸ்., நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை தீவிரம்;மேட்டூர் அணை நீர்வரத்து 8,781 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர்;காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த பருவமழையால், மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 8,781 கனஅடியாக அதிகரித்தது.

காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த, தென்மேற்கு பருவமழையால், கடந்த, 25ம் தேதி கர்நாடகாவின் கபினி அணை நிரம்பியது.அணையில் இருந்து உபரி நீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. அடுத்த ஒரு வாரத்தில் பருவமழை தீவிரம் குறைந்ததால், கபினியில் இருந்து தினமும், 3,000 கனஅடி நீர் மட்டுமே காவிரியில் திறக்கப்பட்டது.

இந்நிலையில், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் நடப்பாண்டு இரண்டாம் கட்டமாக, பருவமழை தீவிரம் அடைந்தது.இதனால், நேற்று முன்தினம், காலை, 10 மணி நிலவரப்படி, பிலிகுண்டலு, காவிரி ஆற்றில், வினாடிக்கு, 9.800 கனஅடியாக அதிகரித்தது. இந்நிலையில், கபினி மற்றும் கே.ஆர்.எஸ்., அணைகளுக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்தது.

நேற்று கபினி அணை நீர்வரத்து, 17,000 கனஅடியாக அதிகரித்தது. கபினியில் இருந்து வினாடிக்கு, 20,000 கனஅடி உபரி நீரும், கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து வினாடிக்கு, 9,000 கனஅடி நீரும் என, மொத்தம், 29,000 கன அடி நீர் காவிரியில் திறக்கப்பட்டது.

இந்த தண்ணீர் நேற்று அதிகாலை முதல், தமிழக எல்லையான பிலிகுண்டலுவை வந்தடைந்தது. நேற்று காலை, 10 மணி நிலவரப்படி, 14,500 கன அடியாக இருந்தது. இது மேலும், அதிகரித்து, மதியம், 12 மணிக்கு, வினாடிக்கு, 16 ஆயிரம் கனஅடியாக உயர்ந்தது. இன்று, இரவுக்குள், வினாடிக்கு, 28 ஆயிரம் கனஅடிக்கு மேல், ஒகேனக்கல், காவிரி ஆற்றை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 4,512 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 8,781 கனஅடியாக அதிகரித்தது. நேற்று அணை நீர்மட்டம், 86.850 அடியாகவும், நீர் இருப்பு, 49.121 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கபினி, கே.ஆர்.எஸ்.,ல் திறந்த கூடுதல் நீர் வந்து சேரும் என்பதால் மேட்டூர் அணை நீர்வரத்து இன்று மேலும் அதிகரிக்கும்.

## நெல் இயந்திர நடவுக்கு ரூ.3,000 மானியம்

மதுரை:மதுரையில் நெல் இயந்திர நடவு எக்டேருக்கு ரூ.3000 மானியம் வழங்கப்படுகிறது.மதுரை கிழக்கு, மேற்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர்கள் தனுஷ்கோடி, செல்வம் கூறியதாவது:மதுரையில் முதல்போக பாசனத்திற்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. விவசாய பணிகள் மும்முரமாக நடக்கிறது. நெல் இயந்திர நடவை ஊக்கப்படுத்தும் பொருட்டு எக்டேருக்கு ரூ.3000 மானியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் கூடுதல் செலவினங்களை தடுத்திட இயலும். இத்திட்டத்தின் கீழ் இயந்திர நடவுக்கு விவசாயி ஒருவருக்கு தலா இரண்டு எக்டேர் வீதம் ரூ.6000 மானியம் வழங்கப்படும்.

கிழக்கு, மேற்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகங்கள், கருப்பாயூரணி, ஒத்தக்கடை, சமயநல்லூர், சிக்கந்தர்சாவடி வேளாண் அலுவலகங்களில் தேவையான விதை நெல் இருப்பு உள்ளது. அதற்குரிய பணம் செலுத்தி விதை நெல்களை விவசாயிகள் பெறலாம். இயந்திர நடவு மானியம் மற்றும் நெல் விதை தேவைக்கு 99941 35950, 99446 44894ல் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

## விளைப்பொருட்களை உலர்த்த மானியத்துடன் சூரிய உலர்த்திகள்

காஞ்சிபுரம்:வேளாண் விளைப் பொருட்களை உலர்த்தும், சூரிய உலர்த்திகள் பெற, விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்து உள்ளார். இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் சண்முகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:வேளாண் விளைப் பொருட்களைப் பதப்படுத்தவும், ஈரத்தன்மையை அகற்றவும், சூரிய உலர்த்திகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இதன்மூலம் மிளகாய்,

வாழை, தேங்காய், காய்கறிகள், கறிவேப்பிலை, முருங்கை போன்ற விளைப் பொருட்களை இலகுவாக உலர்த்தலாம்.இதன் விலை, அனைத்து வரிகளும் உட்பட, 3,85,254 ரூபாய். அரசு சார்பில், இதற்கு, 1,84,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. சூரிய உலர்த்திகள் தேவைப்படும் விவசாயிகள், காஞ்சிபுரம், மதுராந்தகம் மற்றும் நந்தனம் உபகோட்டத்தில் வேளாண் செயற்பொறியாளர்களை அணுகலாம்.இவ்வாறு, அதில் கூறப்பட்டு உள்ளது.

## விவசாயிகளுக்கு கிடைத்தது பறவைகளின் எச்சம் கலந்த மண் உரம்: 2 அடி ஆழம் தூர்வாரப்பட்டது வேடந்தாங்கல் ஏரி

காஞ்சிபுரம்:பறவைகளின் எச்சம் கலந்த மண், விவசாயிகளுக்கு உரமாகப் பயன்படும் என்பதால், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில், துார்வாரப்பட்ட மணலை, உள்ளூர் விவசாயிகளுக்கு, சரணாலய அதிகாரிகள் இலவசமாக அளித்துள்ளனர்.காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருகே உள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பறவைகளின் வாழ்வாதார இடமாக உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, இந்த சரணாலயத்திற்கு வருகை தரும் பறவைகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்ததால், அவற்றை காண வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் குறைந்தது.கடந்த, 2013 - 14ம் ஆண்டில், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தை, 1,07,440 பெரிய வர்களும், 37,994 சிறுவர்களும் பார்வையிட்டு உள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை நடப்புஆண்டில் மிகவும் குறைந்து, 69,731 பெரியவர்களும், 21,682 சிறியவர்களும் மட்டுமே பார்வையிட்டு உள்ளனர். இந்த நிலை நீடித்தால், மோசமான சூழ்நிலையை சரணாலயம் அடையும். அதைத் தவிர்க்க, வேடந்தாங்கல் ஏரியை துார்வாரி, ஆழப்படுத்தினால் பறவைகளின் வரத்து அதிகரிக்கும்

என, சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இயற்கை உரம் அதன்படி, காய்ந்து கிடக்கும் வேடந்தாங்கல் ஏரியை, இரண்டு அடி ஆழம் வரை, துார்வார அதிகாரிகள் முடிவு செய்தனர். அதன்படி கடந்த ஒரு வாரமாக, ஏரியில் துார்வாரும் பணி நடைபெற்று வருகிறது. ஏரி மண்ணில் பறவைகளின் எச்சம் கலந்துள்ளதால், அதை இயற்கை உரமாக பயன்படுத்தலாம். இதனால், வேடந்தாங்கல் ஊராட்சியில் உள்ள விவசாயிகளுக்கு, சரணாலய அதிகாரிகள் துார்வாரிய மண்ணை இலவசமாக அளித்துள்ளனர். இதுவரை கால்நடைகளின் எச்சத்தை உரமாகப் பயன்படுத்தி வந்த விவசாயிகளுக்கு, பறவைகளின் எச்சம் கலந்த மண்ணை உரமாகப் பயன்படுத்துவது, புது அனுபவத்தை ஏற்படுத்தி உள்ளது. வரத்து கூடும் இதுகுறித்து, வேடந்தாங்கல் சரணாலய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வேடந்தாங்கல் ஏரியில், பறவைகளின் எச்சம் விழுந்து, ஏரி நீர் முழுவதும் மாசடைந்தது. தற்போது ஏரி வறண்டு காணப்படுவதால், எச்சம் விழுந்த மண்ணை துார்வாரி அகற்றிஉள்ளோம். இதனால் மழை பெய்து, வரும் புது நீர், சுத்தமாக இருக்கும்; பறவைகளின் வரத்தும் கூட வாய்ப்பபு இருக்கிறது. துார்வாரப்பட்ட மண்ணில் பறவைகளின் எச்சம் கலந்திருப்பதால், அதை உரமாகப் பயன்படுத்தலாம். இதனால், அதை உள்ளூர் விவசாயிகளுக்கு அளித்தோம். இவ்வாறு அவர் கூறினார்.

## முட்டை விலை300 காசாக நிர்ணயம்

நாமக்கல்;தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 310 காசுகளுக்கு

விற்பனை செய்யப்பட்ட முட்டை, 10 காசு குறைத்து, 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 300, ஹைதராபாத், 300, விஜயவாடா, 295, பர்வாலா, 290, மும்பை, 340, மைசூர், 315, பெங்களூரு, 315, கொல்கத்தா, 342, டில்லி, 250.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கிலோ, 63க்கு விற்பனை செய்யப்பட்ட, முட்டைக் கோழி விலையை மாற்றம் செய்யாமல், அதே விலை நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கிலோ, 89 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதை, ஒரு ரூபாய் குறைத்து, கிலோ, 88 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## மும்பை, கொல்கத்தாசெல்லும் முருங்கைக்காய்

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கை வரத்து அதிகரித்துள்ளதால் கொல்கத்தா, மும்பைக்கு லாரிகளில் அனுப்பப்படுகிறது.தாராபுரம், மூலனூர், மார்க்கம்பட்டி மற்றும் ஜெயங்கொண்டம் பகுதிகளில் விளைந்த செடி முருங்கைக்காய் அறுவடை செய்யப்பட்டு, ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு வருகிறது. வரத்து அதிகரித்துள்ளதால் கிலோ ரூ.34 க்கு விற்ற முருங்கைக்காய், விலை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. நேற்று ஒரு கிலோ செடி முருங்கைக்காயின் விலை ரூ.15 ஆக இருந்தது. கொல்கத்தா, மும்பை பகுதிகளில் விளைச்சல் குறைவால், அங்கு முருங்கையின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் ஒட்டன்சத்திரம் முருங்கைக்காயை பெட்டிகளில் அடைத்து லாரிகளில் அங்கு கொண்டு செல்கின்றனர். "மரம் முருங்கை ரூ.13க்கும், கரும்பு முருங்கை ரூ.14க்கும் விற்றது. வரத்து

இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் விலை குறைய வாய்ப்புள்ளதாக' வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ஏலத்தோட்டங்களில் அழுகல் நோய்: கட்டுப்படுத்த ஆலோசனை

கம்பம்:ஏலத்தோட்டங்களில் அழுகல் நோய் தாக்கியுள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்க செய்ய வேண்டிய வழிமுறைகள் குறித்து ஏலக்காய் சாகுபடி தொழில்நுட்ப ஆலோசகர்கள் அன்பழகன், பாண்டியராஜன் தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறியுள்ளதாவது: கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. மழை பெய்துவிட்டால் ஏலச்செடியில் அழுகலை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் திணறுவது தொடர்கிறது. இடுக்கி மாவட்டத்தில் இந்த ஆண்டு கோடையில் மழை பெய்தது. இது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை தந்தது. ஆனால் இப்போது லேசான மழை பெய்வதாலும், மழை பெய்வதற்கான அறிகுறிகளுடன் வானம் மப்பும் மந்தாரமுமாக இருப்பதாலும் அழுகலின் தாக்கம் அதிகரிக்கத் துவங்கியுள்ளது. பொதுவாக அழுகல் நோய் பெரிய அளவில் மழை பெய்தால் இருக்காது. பூஞ்சானங்களை அடித்து சென்றுவிடும். ஆனால் லேசான மழையும், காற்றின் ஈரப்பதம் அதிகரிப்பதால் ஏற்படும் சூழலில் அதிகமாக தாக்கும். தற்போது இடுக்கி மாவட்டத்தில் ஏலச் செடிகளில் அழுகலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அழுகலை கட்டுப்படுத்த அலியேட் 300 கிராம் அல்லது ரெடிமில்கோல்ட் 250 கிராம் அல்லது அக்ரோபெட் 100 கிராம், மெலோடிடியோ 200 கிராம் இதில் ஏதேனும் ஒரு மருந்தை வாங்கி 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். ஏலச்சரம் மற்றும் காய்களில் மட்டும் தெளிக்கலாம். மிக முக்கியமாக அழுகலை ஏற்படுத்த காரணமாக மண்ணில் வசிக்கும் பித்தியம் மற்றும் பைட்டோப்தோரா, அலியேட் மருந்து தெளிக்கலாம், என்றனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கோவையில் நடைபெற்ற வேளாண் கண்காட்சியை 2 லட்சம் பேர் பார்வையிட்டனர் ரூ.60 கோடிக்கு வர்த்தக விசாரணை**



சரவணம்பட்டி

கோவையில் நடைபெற்ற வேளாண் கண்காட்சியை சுமார் 2 லட்சம் பேர் பார்வையிட்டனர். இதில் ரூ.60 கோடிக்கு வர்த்தக விசாரணை நடைபெற்று உள்ளது. வேளாண் கண்காட்சி

கோவை மாவட்ட சிறுதொழில் வளர்ச்சி கழகம், தமிழ்நாடு வேளாண் மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம், தூத்துக்குடி மீன்வள பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து தென்னிந்திய அளவிலான 15-வது வேளாண் கண்காட்சியை நடத்தியது. கோவை கொடிசியா வணிக வளாகத்தில் 'அக்ரி இன்டெக்ஸ் 2015' என்ற தலைப்பில் கடந்த 17-ந் தேதி தொடங்கிய கண்காட்சி நேற்று நிறைவு பெற்றது. கண்காட்சியில் 300-க்கும் மேற்பட்ட அரங்குகள்

அமைக்கப்பட்டு இருந்தன. அனைவரையும் கவர்ந்த போயர் ரக ஆடு கண்காட்சியில் இடம் பெற்று இருந்த இஸ்ரேல் நாட்டில் வளரும் ஜெயின் திசு வாழை, விவசாயிகளை மிகவும் கவர்ந்தது. இந்த ரக வாழை தற்போது தமிழகத்தில் தேனி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. ஜீ-9 என்று அழைக்கப்படும் இந்த வாழை ஒரு ஏக்கரில் 1200 வரை சாகுபடி செய்யலாம். 12 அடி உயரம் வளரும் இந்த வாழையில் 260 காய்கள் வரை காய்க்கிறது. அடுத்தபடியாக போயர் ரக ஆடு அனைவரின் கவனத்தை ஈர்த்தது. நீண்ட தாடியுடன் இருந்த இந்த ஆடு தென்னாப்பிரிக்காவை சேர்ந்தது. 1½ ஆண்டில் வளர்ந்து விடும் இந்த ஆடு சுமார் 100 கிலோ வரை எடை கூடும். இறைச்சிக்காக அதிகம் வாங்கப்படும், இந்த வகை ஆடுகள் பார்க்க அழகாக இருப்பதால் சிலர் வீடுகளில் ஆசையாக வளர்க்கலாம் என்றனர்.

**நவீன தொழில்நுட்பம்**

தற்போதைய காலகட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறைக்காக சொட்டு நீர் பாசனம் விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தப்பட்டு பெரும்பாலானோர் அதை பயன்படுத்தி வருகின்றனர். இதில் தற்போது நவீனமாக்கப்பட்டு உள்ளது. அதாவது, சொட்டுநீர் பாசனத்தை செல்போன் மூலம் இயக்கும் கருவியாகும். இந்த முறையை ஏராளமான விவசாயிகள் பார்த்து, அதன் முறைகளை தெளிவாக கேட்டறிந்தனர். இந்த முறையை பயன்படுத்தும்போது நாம் எங்கு இருந்தாலும், செல்போனை இயக்கி தண்ணீர் பாய்ச்சவும், பழுது ஏற்பட்டால் நமக்கு தெரிவிக்கவும் ஏதுவாக அமைவதால் வறட்சி காலத்தில் மிகவும் பயனுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நகர்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு தனியாக இடம் ஒதுக்கி வீட்டில் செடிகள் வளர்க்க முடியாது. அவர்களுக்கு பயன்தரும் வகையில் மாடித்தோட்டம் குறித்து கண்காட்சியில் இடம்பெற்றது. இதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து நகரவாசிகள் அதிகம் கேட்டறிந்தனர். வீட்டு மாடியில் சிறிய பிளாஸ்டிக் பையில் காய்கறி சாகுபடி செய்யும் முறை

மற்றும் சிறிய ரக பழ மரங்களான கொய்யா, சப்போட்டா உள்ளிட்ட பழவகைகளும் சாகுபடி செய்யலாம் என்று விளக்கி கூறப்பட்டது. இதையடுத்து இந்த முறையில் சாகுபடி செய்ய அதற்கு தேவையான பொருட்களை வாங்கினர். இதுதவிர கரும்பு வெட்டும் கருவி, ஒற்றை நாற்று முறையில் நெல் நடவு செய்யும் எந்திரம், பாக்குமட்டை செய்யும் முறை, தென்னை வளர்ப்பு முறை, நிலத்தை உழும் கருவி, சொட்டுநீர் பாசன முறை, சூரிய மின்சக்தி மூலம் மோட்டார் இயக்குதல், பால் கறக்கும் இயந்திரம், வெண்பன்றி வளர்ப்பு என விவசாயம் மற்றும் கால்நடை தொடர்பான அனைத்துக்கும் மிகவும் பயன் உள்ளதாக இந்த கண்காட்சி அமைந்து இருந்தது.

கருத்தரங்குகள்

கண்காட்சியில் இந்திய வேளாண்மையின் அடுத்த தலைமுறை 3-ம் பதிப்பு என்ற தலைப்பில் சர்வதேச வேளாண் கருத்தரங்கு, மண்சார்ந்த, விதை சார்ந்த, சொட்டுநீர்ப்பாசனம், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு கருத்தரங்குகள் நடைபெற்றன. இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் குழுக்களாக வந்து கலந்து கொண்டு பார்வையிட்டு பயன் அடைந்தனர்.

2 லட்சம் பேர் பார்வையிட்டனர்

இதுகுறித்து கண்காட்சி தலைவர் சசிகுமார் கூறுகையில், 4 நாட்கள் நடந்த இந்த வேளாண் கண்காட்சியில் வேளாண் உற்பத்திக்கான டிராக்டர்கள், மின்மோட்டார், நிலத்தை உழும் எந்திரங்கள் போன்றவை மூலம் ரூ.60 கோடிக்கு வர்த்தக விசாரணை நடைபெற்றது உள்ளது. தொழில் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் அதிக அளவில் கண்காட்சியை பார்வையிட்டனர். அவர்கள் தங்களின் தொழிற்சாலையிலேயே காய்கறி சாகுபடி செய்து அவற்றை பயன்படுத்துவதற்கான முறைகளை தெரிந்து கொண்டனர். இதேபோல், விவசாயிகள் தங்கள் நேரடி கொள்முதல் பொருட்களை சந்தைப்படுத்தினர். விவசாயிகள், விவசாயம் சார்ந்த

தொழில்துறையினர், வேளாண் துறை மாணவர்கள், பொது மக்கள் என்று மொத்தம் 2 லட்சம் பேர் கண்காட்சியை பார்வையிட்டனர், என்றார்.

**ஆனைமலையில் பலத்த மழை**



ஆனைமலை பகுதியில் கடந்த 2 நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் சூறாவளிக்காற்றுடன் மழை பெய்ததால் மரங்கள் விழுந்து பாதிப்புகள் ஏற்பட்டன. இந்த நிலையில் நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 5 மணிக்கு தூறல் மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து 5.30 மணிக்கு காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. மழையினால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் சாக்கடை கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டதால், கழிவுநீர், மழைநீரும் கலந்து சாலையில் ஓடின. மாலை நேரத்தில் ஆனைமலை முக்கோணம் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். நேற்று மாலை பலத்த மழை பெய்ததால் மக்கள்

நடமாட்டம் மிகவும் குறைவாக காணப்பட்டது. இந்த மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாய பொருட்களுக்கு வேளாண் விற்பனைக் குழு உரிமம் பெற வேண்டும் வேளாண் அதிகாரி தகவல்**




மதுரை மாவட்டத்தில் விவசாய பொருட்களுக்கு விற்பனைக்குழு உரிமம் பெற வேண்டும் என்று வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

<u>விளை பொருட்கள்</u>

மதுரை மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்ட விவசாய விளை பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் முறைப்படி மதுரை வேணாண் விற்பனை குழுவிடம் உரிமம் பெற்று வணிகம் செய்வது அவசியம் என்று மதுரை விற்பனை குழு செயலாளர் தவசுமுத்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:– மதுரை மாவட்டத்தில் நெல், பருத்தி, பஞ்சு, கழிவு பஞ்சு, நிலக்கடலை, இலவம் பஞ்சு, புளி, வெங்காயம், தேங்காய், கம்பு, சோளம், உருளைகிழங்கு, மிளகாய், துவரை, மா, தக்காளி, திராட்சை உள்ளிட்ட பொருட்கள் அறிக்கையிடப்பட்டுள்ள விளைபொருட்களாக உள்ளன.

எனவே இவற்றை கையாளும் மற்றும் விற்பனை செய்யும் வணிகர்கள் தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனை சட்டத்தின் படி விற்பனை குழுவிடம் உரிமம் பெறுவது அவசியம். இந்த பொருட்களை கையாள்வதற்கும், விற்பனை செய்வதற்கும் ஏற்கனவே உரிமம் பெற்ற வணிகர்கள் முறைப்படி உரிமங்களை புதுப்பித்து கொள்வதும் கணக்குகளை விற்பனை குழுவிடம் அளிக்கவும் வேண்டும்.

<u>நேரடியாக விற்பனை உரிமம்</u>

எனவே,இதுவரை உரிமம் பெறாத வணிகர்கள் உடனடியாக மதுரை விற்பனை குழுவிடம் விண்ணப்பித்து உரிமம் பெற்று கொள்ள வேண்டும். ஒரு ஆண்டில் ரூ.2 லட்சத்திற்குள் வணிகம் செய்யும் வணிகர்கள் உரிம கட்டணமாக ரூ.25–ம், ரூ.2 லட்சம் முதல் 5 லட்சத்திற்குள் வியாபாரம் செய்யும் வணிகர்கள் ரூ.75–ம், 5 லட்சத்திற்க்கு மேல் வியாபாரம் செய்யும் வணிகர்கள் ரூ.300–ம் உரிம கட்டணமாக செலுத்த வேண்டும்.

தற்போது அரசு செயலாளரின் அறிவுரைப்படி, விற்பனைக் குழு அலுவலர்கள் வணிகர்களை தேடி வந்து நேரடியாக விற்பனை உரிமம் வழங்க உள்ளனர். எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொண்டு வணிகர்கள் உரிமம் பெற்று கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**நீர் ஆதாரங்களை பாதுகாக்க வலியுறுத்தி பிரசாரம் விவசாய சங்கம் தீர்மானம்**




நீர் ஆதாரங்களை பாதுகாக்க வலியுறுத்தி பிரசாரம் செய்யப்போவதாக தமிழ்நாடு விவசாய சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விவசாய சங்க கூட்டம்

தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட கவுன்சில் கூட்டம் தஞ்சை மாவட்ட இந்திய கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு துரை.பிச்சையப்பா தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பாலசுந்தரம் அறிக்கை வாசித்தார். கூட்டத்தில் நிர்வாகிகள் கருணாமூர்த்தி, கலியபெருமாள், ராமலிங்கம், கல்யாணசுந்தரம், ரவி, கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தமிழகத்தின் நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும், பயிர்க்கடன் வழங்க வேண்டும், இடுபொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும், விளை பொருட்களுக்கு கட்டுப்படியான விலையை நிர்ணயிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற

ஆகஸ்டு மாதம் மாநிலம் தழுவிய பிரசாரம் மேற்கொள்வது. ஆகஸ்டு மாத இறுதியில் விவசாயிகள் மாநாட்டை தஞ்சையில் நடத்துவது. இந்த பிரசார பயணத்தில் பங்கேற்பது. தஞ்சையில் நடைபெறும் மாநாட்டை சிறப்பாக நடத்துவது. மேலாண்மை வாரியம் காவிரி நதி நீர் பங்கீட்டில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் படியும், நடுவர் மன்ற தீர்ப்பின்படியும், சட்ட ரீதியான தண்ணீரை மத்திய அரசு பெற்றுத்தர வேண்டும். மேலும் காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து கண்காணிக்கவும் மத்திய அரசை வலியுறுத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருச்சி வருகையின்போது ராகுல் காந்தி 200 விவசாயிகளை சந்தித்து பேசுகிறார் காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பேட்டி**



திருச்சி வருகையின்போது, ராகுல் காந்தி 200 விவசாயிகளை சந்தித்து பேசுவார் என்று காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறினார்.

இளங்கோவன் பார்வையிட்டார்

திருச்சி பொன்மலை ஜி.கார்னர் ரெயில்வே மைதானத்தில் 23-ந்தேதி (வியாழக்கிழமை) காமராஜர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்த பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய துணை தலைவர் ராகுல் காந்தி எம்.பி. கலந்து கொண்டு பேசுகிறார். பொதுக்கூட்டம் நடைபெற உள்ள மைதானத்தில் ராகுல் காந்தி பேசுவதற்கான மேடை, தொண்டர்கள் அமர்வதற்கான இடங்களில் தடுப்பு வேலிகள் அமைப்பது உள்பட பல்வேறு பணிகள் நடந்து வருகின்றன. இதனை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நேற்று பார்வையிட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் இளங்கோவன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

200 விவசாயிகளுடன் ராகுல் சந்திப்பு

காமராஜர் புகழைப்பற்றி பேசுவதற்காகவே திருச்சியில் பொதுக்கூட்டம் நடத்தப்பட உள்ளது. இந்த பொதுக்கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி துணை தலைவர் ராகுல் காந்தி எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

அத்துடன் விமான நிலையம் அருகில், புதுக்கோட்டை சாலையில் உள்ள பண்ணை இல்லத்தில் சுமார் 200 விவசாயிகளை ராகுல் காந்தி சந்தித்து பேசுகிறார். பல்வேறு விவசாய சங்க தலைவர்கள், விவசாயிகளும் இதில் இடம்பெறுவார்கள். காவிரி பாசன விவசாயிகள் மட்டும் இன்றி கரும்பு, ரப்பர், தேயிலை விவசாயிகளும் இதில் பங்கேற்பார்கள்.

யார் துரோகி?

மத்தியில் பாரதீய ஜனதா அரசு பதவி ஏற்ற ஓராண்டு காலத்தில் மராட்டியம், ஆந்திரா, பீகார், தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களில்

ஏராளமான விவசாயிகள் தற்கொலை செய்து இருக்கிறார்கள். தமிழகத்தில் விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதி பற்றி முதல்-அமைச்சர் ஜெயலலிதா கவலைப்படவில்லை. ஆனால் ராகுல் காந்தி விவசாயிகளின் பிரச்சினைகளை கேட்டு தீர்ப்பதற்காக டெல்லியில் இருந்து வருகிறார். காந்தியை சுட்டுக்கொன்ற இயக்கத்தை சேர்ந்தவர்களுக்கு காங்கிரசாரை தேச துரோகிகள் என கூறுவதற்கு எந்த அருகதையும் கிடையாது.

திருச்சியில் ராகுல் காந்தி பங்கேற்று பேச உள்ள பொதுக்கூட்டம் பிரமாண்ட மாநாடு போல் நடைபெறும். இதில் தமிழகம் முழுவதும் இருந்து லட்சக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொள்வார்கள். இவ்வாறு அவர் கூறினார்.
பேட்டியின்போது அகில இந்திய செயலாளர் சென்னாரெட்டி, மாவட்ட தலைவர்கள் ஜெரோம் ஆரோக்கியராஜ், ஆர்.சி.பாபு, தொட்டியம் சரவணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**விற்பனை மந்தம் பெரிய வெங்காய மூடைகளை இறக்க 3 நாட்களாக காத்திருக்கும் லாரிகள்**



திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு மராட்டியம், கர்நாடக

மாநிலங்களில் இருந்து அதிக அளவு பெரிய வெங்காயம் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. இந்தநிலையில் திருப்பூரில் கடந்த சில நாட்களாக பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்து காணப்படுகிறது. இதனால் பொதுமக்களும், சில்லறை வியாபாரிகளும் பெரிய வெங்காயத்தை அதிகஅளவு வாங்கி இருப்பு வைப்பதை தவிர்த்து வருகிறார்கள்.

இதனால் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் பெரிய வெங்காய விற்பனை மந்தமாக உள்ளது. இதன்காரணமாக பெரிய வெங்காய மூடைகள் தேங்கி உள்ளன. இதற்கிடையே மராட்டிய மாநிலத்தில் இருந்து கடந்த 3 நாட்களுக்கு முன்பு 4 லாரிகளில் வெங்காய மூடைகள் வந்துள்ளன. இவற்றை சேமித்து வைக்க இடம் இல்லாததால், பெரிய வெங்காய மூடைகள் இறக்கப்படாமல் லாரியிலேயே உள்ளன. சரக்குகள் இறக்கப்படாததால் பிற வாடகைக்கு செல்ல முடியாமல் லாரி ஓட்டுனர்கள் அவதி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, வெங்காய வியாபாரிகளிடம் கேட்ட போது, ‘‘திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில், 50 கிலோ எடை கொண்ட பெரிய வெங்காய மூடை ஒன்று ரூ.1,200 முதல் ரூ.1,400 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது மராட்டிய மாநிலத்தில் இருந்து ஒரு மூடை ரூ.1,300–க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் அவற்றை இறக்காமல், லாரிகளிலேயே இருப்பு வைத்துள்ளோம். பழைய வெங்காயம் விற்ற பின்னர் தான் அவை லாரியில் இருந்து இறக்கப்படும்’’ என்றனர்.

தினகரன்

## நகரங்களை விட ஆரோக்கியம் தரும் கிராமங்கள்




புதுடெல்லி: நகர்ப்புறங்களை விட கிராமப் புறங்களில் நிலவும் சூழ்நிலை ரம்மியமாகவும் மன அமைதியாக இருப்பதை பலரும் உணர்ந்திருக்கலாம். இதனால் தானோ என்னவோ நகரங்களில் வசிப்பவர்களை விட கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் மிகவும் ஆரோக்கியத்துடன் வாழ்வதாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் முடிவு தெரிவிக்கிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களில் 12 சதவிகிதம் பேர் ஏதேனும் ஓர் உடல் நலக் குறைவு இருப்பதாக தெரிவித்துள்ளனர். இது கடந்த 2004ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஆய்வு முடிவுகளை விட 2 சதவிகிதம் கூடுதலாகும். ஆனால், இதற்கு மாறாக கிராமப்புற வாசிகளில் 9 சதவிகிதம் பேர் மட்டுமே தாங்கள் ஏதோெ◌வாரு உடல் உபாதையுடன் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

மருத்துவ செலவுக்கான காப்பீடு உள்பட சேமிப்பு பழக்கம், கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களில் 86 சதவிகிதம் பேரிடமும் நகர்ப்புறங்களில் 82 சதவிகிதத்தினரிடமும் இல்லை என்று தெரியவந்துள்ளது. சராசரியாக, ஏதேனும் ஓர் உடல் நலக் குறைவுக்காக மருத்துவமனைக்கு செல்லும் போது அதற்காக ஆகும் செலவு

கிராமப்புறத்தில் 509 ரூபாயாக மட்டுமே உள்ளது. ஆனால் நகர்ப்புறத்தில் இதுவே 639 ரூபாயாக உள்ளது. மத்திய புள்ளியியல் அமைச்சகம் நடத்திய இந்த ஆய்வில் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் அலோபதி எனப்படும் ஆங்கில மருத்துவ முறையையே மக்கள் அதிகம் நாடுவதும், தனியார் மருத்துவர்களையே அவர்கள் அதிகம் நாடிச் செல்கின்றனர் என்றும் தெரிகிறது.

45 முதல் 59 வயது வரை உள்ளவர்களில் நகர்ப்புறங்களில் 21 சதவிகிதம் பேர் ஏதேனும் ஒரு உடல் நல பாதிப்பு இருப்பதாக தெரிவிக்கும் நிலையில் கிராமப்புறத்தைப் பொறுத்த வரையில் இது 13 சதவிகிதமாக மட்டுமே உள்ளது. நகர்ப்புற மக்களிடையே ஏதேனும் ஒரு நோய் பாதிக்கப்பட்டவரின் விகிதம் அதிகம் இருப்பது போலவே அதற்கு சிகிச்சை செய்து கொள்ளும் வசதியும் இருக்கத்தான் செய்கிறது. நகர்ப்புற வாசிகள் தங்கள் வருவாய் அல்லது சேமிப்பைக் கொண்டு சிகிச்சை பெறுகின்ற நிலையில் கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என்றால் யாரிடம் கடன் வாங்கலாம் என்று யோசிக்கும் நிலை நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது.

**காவிரியில் 35,000 கன அடி தண்ணீர் கர்நாடகம் திறப்பு**




பெங்களூரு: கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள கே.ஆர்.எஸ்

மற்றும் கபினி அணைகளில் இருந்து தமிழகத்திற்கு வினாடிக்கு 35 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலம் காவிரி டெல்டா பகுதியில் கன மழை பெய்து வருவதால், நேற்று மாலை நிலவரப்படி 124.80 அடி உயரம் கொண்ட கே.ஆர்.எஸ் அணைக்கு 15 ஆயிரத்து 705 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. தமிழகத்திற்கு வினாடிக்கு 12 ஆயிரத்து 836 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டமும் உயர்ந்து 109.75 அடியாகவுள்ளது. மொத்தம் 2,284 அடி உயரமுள்ள கபினி அணையில் 2,283.69 அடி தண்ணீர் உள்ளது.

அணைக்கு வினாடிக்கு 20 ஆயிரத்து 117 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்த வினாடிக்கு 23 ஆயிரம் கன அடி தண்ணீர் தமிழகத்திற்கு திறக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து நல்ல மழை பெய்து வருவதால் அணைகள் வேகமாக நிரம்பி வருகிறது. எனவே தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடும் அளவு இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

**தென்னையை சேதப்படுத்தும் கூன் வண்டுகளை அழிப்பது எப்படி? வேளாண்துறையினர் ஆலோசனை**

சிவகங்கை, : தென்னை மரத்தினை தாக்கி சேதப்படுத்தும் கூன் வண்டுகளை அழிப்பது எப்படி என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் தெரிவித்ததாவது: இளம், வளரும் பருவத்தில் உள்ள தென்னங்கன்றுகளை காண்டாமிருக வண்டு தாக்கும். இவற்றை எருக்குழியில் காணப்படும் கூட்டுப்புழு, வண்டுகள் போன்றவற்றைப் பொறுக்கி அழிக்க வேண்டும். கார்பாரில் 2 கிராம் நனையும் தூளை ஒரு லிட்டர் தண்ணீல் கரைத்து 3 மாதங்களுக்கு ஒரு

முறை எருக்குழியில் தெளிப்பதுடன், வளர்ந்து வரும் புழுக்களை அழிக்க பச்சை மஸ்கார்டின் என்ற பூஞ்சாணத்தை ஊற்றி அழிக்கலாம்.

கவர்ச்சிப் பொறிகளை 2 ஹெக்டேருக்கு ஒன்று வீதம் வைப்பதன் மூலம் வண்டுகளைக் கவர்ந்து அழிக்க முடியும். சிவப்புக் கூன் வண்டு தாக்குதலை ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்க இயலாது. வண்டுகள் குருத்துப் பகுதிகளில் முட்டையிட்டு நேரடியாக குருத்தினுள் சென்று திசுக்களை உண்பதால் நடுக்குருத்து வாடி, பின்னர் அனைத்து மட்டைகளும் சரிந்து விடுகின்றன. சில நேரங்களில் தண்டுப்பகுதியில் ஏற்படும் காய்களின் மூலம் உள்சென்று திசுக்களை உண்டு, சிறிய துவாரம் வழியாக வெளியேற்றப்படும் கழிவுப்பொருள்கள் மிகுந்த துர்நாற்றத்தை உண்டாக்கும். இடி தாக்கிய மரங்கள், கூன்வண்டு தாக்கிய மரங்கள் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். வண்டுகளுக்கு வாழ்விடமாக அமைவதால் அந்த மரங்களை அப்புறப்படுத்திட வேண்டும்.

கருந்தலைப்புழு தாக்குதலால் கீழ் அடுக்கிலுள்ள மட்டைகள் காய்ந்து பழுப்பு நிறமாகவும், இளமட்டைகள் மட்டும் பச்சையாகவும், தென்படும். தீவிர பாதிப்புக்கு உள்ளான மரங்கள் தொலைவிலிருந்து பார்க்கும் போது கருகியது போன்று காணப்படும். இலைகளின் அடிப்பரப்பில் புழுக்களின் எச்சங்கள் காணப்படும். கருந்தலைப்புழுக்கள் பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். தாக்குதலைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி எடுப்பதுடன், டைக்குளோர்வாஸ் அல்லது மாலத்தியான் மருந்தை லிட்டருக்கு 2 மில்லி அளவில் கலந்து பாதிக்கப்பட்ட இலைகளில் படும் வகையில் தெளிக்கலாம்.

ஈரியோபைட் சிலந்திப்பூச்சி 2 முதல் 6 மாத குரும்பைகளில் உள்ள காம்பின் அடியில் கூட்டமாகச் சேர்ந்து சாற்றை உறிஞ்சுவதால்,

குரும்பைகள் உதிர்கின்றன. இரண்டு மூன்று மாத குரும்பைகளில் முக்கோண வடிவில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்திட்டுகளை ஏற்படுத்துகின்றன. இந்த வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மரங்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் அசாடிராக்டின் ஒரு சத மருந்து 5 மில்லி அல்லது வேப்ப எண்ணெய் 30 மில்லி மருந்தை லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து ஜனவரி, மார்ச், மே மாதங்களில் 2 முதல் 6 மாத குரும்பைகளில் தெளிக்கலாம். தவிர தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக்கை மரத்துக்கு 200 மில்லி என்ற அளவில் 6 மாத இடைவெளியில் ஆண்டுக்கு 2 முறை வேர் மூலம் செலுத்தலாம். இவ்வாறு தெரிவித்தனர்.

**தனி நபர் பொருளீட்டு கடனாக விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம்**

உடுமலை, : தனிநபர் பொருளீட்டுக் கடனாக விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வேளாண் அதிகாரி தெரிவித்தார். தமிழ்நாடு அரசு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்துறை கோவை விற்பனைக்குழு மடத்துகுளம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் சார்பில் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. வேளாண்மை அலுவலர் திருமகள் ஜோதி தலைமை தாங்கி உழவர் உற்பத்தியாளர் கம்பெனி அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கான அங்கீகாரம் கிடைத்தல், அவர்களின் உற்பத்தி பொருட்களுக்கு பெயர் சூட்டல், இடுபொருட்களை குறைந்த செலவில் கொள்முதல் செய்து குழு உறுப்பினர்களுக்கு வினியோகித்தல் ஆகியவற்றை எடுத்து கூறினார். மேலும் தேங்காய், மக்காச்சோளம், கொண்டைக்கடலை பயிர்களை காயவைத்து பதப்படுத்தி, தரம் பிரித்து அறுவடை முதல் விற்பனை வரையிலும் நவீன முறைப்படி சேமித்து மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்வதால் விசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்குமென விழிப்புணர்ச்சி

ஏற்படுத்தினார்.

தொடர்ந்து விற்பனை கூட கண்காணிப்பாளர்(பொ) சண்முகசுந்தரம் பேசியதாவது: விவசாயிகள் அறுவடை செய்த விளைபொருட்களை நன்கு காய வைத்து தரம் பிரித்து இருப்பு வைத்து விற்பனை செய்யலாமா அல்லது இருப்பு வைத்து பின் விற்பனை செய்யலாமா என விலை விவரங்களை தெரிந்து கொண்டு விற்பனை செய்ய வேண்டும். ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் தனிநபர் பொருளீட்டு கடனாக ரூ.2 லட்சம் வழங்கப்படுகிறது. விவசாய விளைபொருட்களின் விலை வீழ்ச்சி காலங்களில் ஏற்படும் இழப்பை தடுப்பதற்கும் அவசர தேவைகளுக்கும் 5 சதவீத வட்டியில் அதிகபட்சம் 180 நாட்கள் வரை விற்பனை கூட கிட்டங்கியில் இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெறலாம். உலர்களம் கிட்டங்கி வசதிகளையும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு சண்முகசுந்தரம் பேசினார். முகாமில் உதவி வேளாண்மை அலுவலர் செந்தில் திலீப்குமார் நன்றி கூறினார்.

**மாவட்டத்தில் மானிய விலையில் சோலார் டிரையர் கூடாரம்**

தேனி, : தேனி மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலமாக சோலார் டிரையர் கூடாரம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கலெக்டர் வெங்கடாச்சலம் கூறினார். சோலார் டிரையர் சூரிய சக்தியை உட்கொண்டு வெப்ப வெளியேற்றத்தை குறைக்கிறது. இதனால், டிரையரின் உள்ளே உள்ள காற்றின் வெப்ப அளவு உயர்த்தப்படுகிறது. இந்த வெப்பக்காற்றானது மின்விசிறி மூலம் செலுத்தப்படுவதால் பொருட்கள் விரைவில் உலர்த்தப்படுகிறது. சோலர் டிரையர் மூலம் வாசனை திரவியங்கள், பருப்பு, மீன்கள், முந்திரிப்பருப்பு, நெல், காப்பிக்கொட்டை, மண்பாண்டம், புகையிலைப் பொருட்கள், மரங்கள், ரப்பர், கெமிக்கல் போன்ற பொருள்களை உலர்த்த

முடியும். இத்தகைய சோலார் டிரையர் கூடாரம் குறித்து தேனி மாவட்ட கலெக்டர் வெங்கடாச்சலம் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் சோலார் டிரையர் கூடாரம் அமைக்க அரசு நிதி ஒதுக்கி உள்ளது. இதற்கு 50 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது. 400 சதுர அடியில் தட்டுக்கள் மற்றும் தள்ளுவண்டி இல்லாமல் கூடாரம் அமைக்க மொத்தத் தொகையான ரூ.2 லட்சத்து 42 ஆயிரத்து 356ல் 50 சதவீதம் மானியத் தொகை ரூ.1 லட்சத்து 21 ஆயிரத்து 780 வழங்கப்பட உள்ளது" என்றார். இத்தகைய சோலார் டிரையர் கூடாரம் அமைக்க வேளாண்மை பொறியாளர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு விபரங்களை அறியலாம் என கலெக்டர் வெங்கடாச்சலம் தெரிவித்தார்.